சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

<u>Case No. OS.203/2018</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.2**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபாலகிருஷ்ணன் | தொழில் | பொறியாளர் |
| தந்தை பெயர் | தாமோதரன் | ஜாதி | |
| கிராமம் | ஈக்காட்டுதாங்கல் | சமயம் | |
| தாலுக்கா | சென்னை | வயது | 45 |

**<u>09.02.2026 முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதிதரப்பு சாட்சி ஆவேன். வாதி, பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் எனது தகப்பனாரின் கையொப்பம் உள்ளது. பாண்டை எழுதியவர் என்ற இடத்தில் எனது தகப்பனாரின் கையொப்பம் உள்ளது.

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தாவா பாண்டான வா.சா.ஆ.1ஐ பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். தாவா பாண்டில் குறிப்பிடப்பட்டுள்ள பழனி மற்றும் திலகம் ஆகியோரை பற்றி நேரடியாக தெரியாது. தாவா பாண்டு என்ன நோக்கத்திற்காக எதற்காக எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.